# 2016 அக். 20க்கு முன்பதிவு செய்யப்பட்ட அனுமதியற்ற மனைப் பிரிவுகளுக்கு காலக்கெடு இல்லா வரன்முறை!

## அமைச்சர் சு.முத்துசாமி பதிலுரை... 13 ஆம் பக்கத் தொடர்ச்சி

கழகத்தின் அரசு அமைந்ததற்குப் பிறகு இன்று வரை 4,992.25 கோடி ரூபாயில், ஏறத்தாழ 5 ஆயிரம் கோடி ரூபாய்க்கான திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு, 18,528 அலகுகள், அதாவது வீடுகளோ, மனைகளோ உருவாக்கப்பட்டிருக்கின்றன என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, நீண்ட நாட்களுக்கு முன்பாகவே வீடு வாங்கியிருக்கிறார்கள். ஆனால் பட்டா கிடைக்கவில்லை. வாரியமே கொடுத்திருக்கிறது. ஆனால் பட்டா கொடுக்க வில்லை. இதுபற்றி முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு வந்தவுடனேயே, நம்முடைய துணை முதலமைச்சர் அவர்களுடைய தலைமையில் ஒரு குழுவை அமைத்தார்கள். இந்தத் துறை மட்டுமல்ல, மற்ற துறைகளிலும் இந்தப் பிரச்சினை இருக்கிறது. அதற்கொரு தீர்வு காண வேண்டும் என்பதற்காக, அந்தக் குழு மூலமாக நடவடிக்கை எடுக்கப்பட்டு, ஏறத்தாழ 6,166 பட்டாக்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். யாரேனும் சில பேருக்கு பட்டா கிடைக்காமலிருந்தால், அது வீட்டு வசதி வாரியத்தினுடைய தவறு அல்ல. சம்பந்தப்பட்டவர்கள் சரியாக docu ments கொடுக்காமல் இருந்திருக்கலாம் அல்லது வீட்டு உரிமையாளர் யார் என்று தெரியாமல் இருந்திருக்கலாம். எனவே, அது போன்ற பிரச்சினைகள் இருந்திருந்தால் பட்டா கிடைக்காமலிருந்திருக்கும். எனவே, யார் அணுகினார்களோ அவர்களுக்கெல்லாம் பட்டாக்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

### அரசு அலுவலகங்கள் வாடகை குடியிருப்புகள்!

அதேபோன்று, அரசு அலுவலர்கள் வாடகைக் குடியிருப்புகள் 148 இடங்களில் 24,493 வீடுகள் இருக்கின்றன. அவற்றில், 60 வளாகங்களில் இருக்கிற ஏறத்தாழ 10 ஆயிரம் வீடுகள் மிக மோசமான நிலைக்குப் போய்விட்டன.

இந்த 60 வளாகத்தினையும் இடித்து, புதிதாகக் கட்டுவதற்கான திட்டத்தை அரசின் மூலமாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று முதலமைச்சர் அவர்கள் எங்களுக்கு உத்தரவிட்டார்கள். இன்றைக்கு அதற்கான ஏற்பாடுகளை செய்து, பல இடங்களில் இடிக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பணிகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. 2, 3 இடங்களில் அதற்கான கட்டட பணிகள் துவங்கியிருக்கிறது. இது இன்னும் வேகமாகத் துவக்கப்படும், செய்யப்படும் என்பதையும் இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அவையெல்லாம் மிக ஆபத்தான் நிலையிலிருந்து கட்டடங்கள் என்பதை நான் இங்கே சொல்லியாக வேண்டும். அதேபோல், Apartment Ownership Act அடுக்குமாடி குடியிருப்பு உரிமையாளர் சட்டம் என்று ஒன்று கொண்டு வரப்பட்டது. எதற்காக? ஏறத்தாழ 40, 50 ஆண்டு காலத்திற்கு முன்னர் கட்டி விற்கப்பட்ட சுய நிதி திட்டத்தின்மூலம் கட்டி விற்கப்பட்ட வீடுகள். வீட்டு வசதி வாரியத்திற்கும் அதற்கும் எந்தவித சம்பந்தமும் கிடையாது. அவர்கள் வாங்கி விட்டார்கள்.

ஆனால், தற்போது அவை இடிந்து விழுந்து கொண்டிருக்கிறது. அங்கே இருப்பவர்கள் எல்லோரும் அங்கிருந்து காலி செய்து சென்று கொண்டேயிருக்கிறார்கள். இதனை மறுபடியும் redevelop செய்வதற்கு எங்களுக்கு வாய்ப்பு வேண்டும் என்று அவர்கள் வந்து அரசைக் கேட்டார்கள். எனவே, இருக்கிற சட்டத்தில் அந்த வாய்ப்பு இல்லை. எனவே, புதிதாக ஒரு சட்டத்தை உருவாக்கி, அதற்கான ஏற்பாட்டை செய்து, ஆனால் முழு பொறுப்பு அவர்கள். நாங்கள் யாரும் builderஐ select செய்வதில்லை. அந்தப் பொறுப்பு முழுவதும் அவர்களிடத்தில் தான் இருக்கிறது. அவர்கள் தான் செய்து கொள்ள வேண்டும். அதற்கான ஏற்பாட்டை செய்து கொண்டிருக்கிறோம். ஏறத்தாழ 10 இடங்களிலிருந்து அதற்குத் தயாராகி வந்திருக்கிறார்கள். ஏறத்தாழ 100 ஏக்கர் பரப்பளவில் இந்தப் பிரச்சினை அவர்களுக்கு இருக்கிறது. 5,872 ஏக்கர் அதிலிருந்து செய்து கொடுக்கப்படும் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகி றேன். அடுத்து மிக முக்கியமான ஒரே ஒரு திட்டத்தைப் பற்றி நான் சொல்கிறேன். (குறுக்கீடு) அவசரம் என்று கருதுகிறேன். மிக முக்கியமான ஒரு திட்டம். அதாவது வீட்டு வசதி வாரியத்தால், 40 ஆண்டு காலத்திற்கு முன்னால், வெறும் noticeஐ கொடுக்கிறார்கள். அதுமட்டுமல்ல, அவர்கள் கொடுத்தது, இந்த நிலத்தை எடுக்கலாம் என்ற ஓர் உத்தேசம் செய்யப்படுகிறது. அது record செய்யப்படுகிறது. அதுபோன்று 10,047 ஏக்கருக்கு 40 ஆண்டுகளுக்கு முன்னால், உத்தேசம் செய்யப்பட்ட காரணத்தினால், அந்தச் சொத்து அவர்களுடையதுதானா என்பதில் அவர்களுக்கு சந்தேகம். ஆனால், இவையெல்லாம் வெளியில் விளம்பரமாக தெரியாத காரணத்தால், பல பேருக்கு அது விற்கப்பட்டுவிட்டது. இன்றைக்கு பல இலட்சம் பேர் அதனை வாங்கியிருக்கிறார்கள். ஆனால், அது அவர்களுக்கு உரிமையாக வில்லை. முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு வந்தவுடனேயே அந்த 10,047 ஏக்கரையும் விடுவிக்க வேண்டுமென்று ஒரே ஒரு circular அனுப்பி, அதனை விடுவித்து விட்டார்கள். அதில் பல இலட்சம் பேர், ஏறத்தாழ 21 இலட்சம் பேர் அந்த ஒன்றில் மட்டும் பயன்பெற்றிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மீதமிருக்கிற அத்தனையும் ஒரு 5 category ஆக பிரித்தார்கள். அதிலே 1, 2 என்ற category Section 4(1) notice மட்டும் கொடுத்தது. வேறு எந்த மேல்நடவடிக்கையும் எடுக்கவில்லை. எத்தனை வருடங்களாக? 35. 40 ஆண்டுகளாக எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. 2, 3 ஆண்டுகள் என்றால், கண்டிப்பாக அதனை நாங்கள் தொடர்ந்து எடுத்திருப்போம். ஆனால், 35, 40 ஆண்டு காலமாக பல ஆயிரம் பேர் அதில் வீடுகளை வாங்கி அவர்கள் சிறிய வீடுகளாகக் கட்டி, மிக சாதாரண மக்கள், கடனை வாங்கி கட்டியிருக்கிறார்கள்.

## 300 சதுர அடி வணிகக் கட்டிடத்திற்கு சி.சி. வாங்க வேண்டியதில்லை!

எனவே, அதற்கும் ஏற்பாட்டை செய்து, ஏறத்தாழ 3,710 ஏக்கர். அதிலே மொத்தம் 5,933 ஏக்கர். அதிலே 3,710 ஏக்கர் தற்போது விடுவிக்கப்பட்டு, முதலமைச்சர் அவர்களால், அவர்களுக்கு அந்த அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அது மட்டுமல்ல, 3, 4 categoryயில் ஏறத்தாழ 5,704 ஏக்கர் இருக்கிறது. அதிலே வீட்டு வசதி வாரியம் ஒரு award கொடுத்திருக்கிறது. எனவே, அதன் காரணத்தால், உடனடியாக, நேரடியாக நடவடிக்கை நாம் உடனடியாக எடுக்க முடியாது. எனவே, அதற்காக ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அதில் 2 ஓய்வு பெற்ற IAS அதிகாரிகள் போடப்பட்டிருக்கிறது. அவர்கள் இன்னும் ஒரு மாத காலத்தில் அதற்கான ஓர் அறிக்கையைக் கொடுக்கவிருக்கிறார்கள். அந்த அறிக்கையை வைத்து அந்தப் பணி மேற்கொள்ளப்படும். இதில் ஒன்றை நான் உங்களுக்குத் தெளிவுப்படுத்த விரும்பு கிறேன். இதில் அமைச்சர்களோ, யாருமே விருப்பப்படி இதனை விட்டுவிடலாம்; இதனை வைத்துக்கொள்ளலாம் என்று முடிவெடுக்க முடியாது. ஏனென்றால் ஒரு வரையறை செய்யப்படுகிறது. ஒன்று இப்படி செய்ய வேண்டும் அல்லது அப்படி செய்ய வேண்டும். அதற்கு அந்த வரையறையை அந்த committee கொடுத்து விடும். ஒரு சிறிய தவறுகூட இதிலே நடந்து விடக்கூடாது என்பதில் முதலமைச்சர் அவர்கள் மிகுந்த அக்கறையோடு இதனை செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இது பாதிக்கப்பட்ட பல இலட்சம், ஏறத்தாழ 4 இலட்சம் குடும்பங்கள் இதிலிருந்து தப்பித்து வெளியிலே வருகிறார்கள். இந்த சொத்து நம்முடையது தானா என்பது தெரியாது. நாம் யோசித்துப் பார்க்க வேண்டும். நாம் ஒரு இரண்டு ground வாங்கி, அதற்கு பின்னால் அதில் பிரச்சினை வந்தால், நமக்கு மனம் எப்படியிருக்கும். ஆனால், அதே நிலைதான் அந்த மக்களுக்கு இருந்தது. இன்றைக்கு ஏறத்தாழ 35 ஆண்டு காலத்திற்கு பின்னால், முதலமைச்சர் அவர்கள் அதற்கு ஒரு முற்றுப்புள்ளியை வைத்திருக்கிறார் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்ள விரும்பு கிறேன்.

### கூட்டுறவு சங்கத்தின் மூலம் சிமெண்ட் விற்பனை!

இப்படி பல்வேறு திட்டங்களை முதலமைச்சர் அவர்கள் செய்துகொண்டு இருக்கிறார்கள். நிலுவையிலிருக்கிற வீடுகளுக்கெல்லாம் கடன் தள்ளுபடி என்று கேட்டார்கள். வட்டி தள்ளுபடி எல்லாம் செய்யப்படுகிறது. இதையெல்லாம் சொன்னால் மிக நீண்ட நேரம் ஆகும். அதுபோல், கூட்டுறவு சங்கத்தின் மூலமாக சிமெண்ட் விற்கும் பணியும் செய்கிறார்கள். மருந்து விற்கின்ற பணி, எரிபொருள் நிரப்புகிற திட்டம், அதேபோல பொது சேவை மையம். இவையெல்லாம் மிக இலாபகரமாக நடைபெற்று கொண்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். தியாகி குமரனுடைய கல்லூரியைப் பற்றி சொன்னார்கள். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், அதற்கு ஏகப்பட்ட பணிகளை செய்துக் கொடுத்திருக்கிறார்கள். இன்றைக்கு 2,300 மாணவிகள் அங்கே படிக்கிறார்கள். 141 பேர் அங்கே படித்ததற்காக அவர்கள் பரிசுகளைப் பெற்றிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்து க்கொள்ள விரும்புகிறேன். இப்படி பல்வேறு திட்டங்கள் எல்லாவற்றையும் சொன்னால், மிகுந்த காலதாமதம் ஏற்படும். எனவே, 27 அறிவிப்புகள் இருக்கின்றன. அவற்றில் சிலவற்றை மட்டும் உங்கள் முன்னால் நான் வைக்க விரும்புகிறேன்.

### அறிவிப்புகள்

#### நகர் ஊரமைப்பு இயக்ககம்

1. சுயசான்றிதழ்மூலம் தூண் தளம் மற்றும் இரண்டு தளம் (Stilt + 2 Floors) கொண்ட குடியிருப்பு கட்டடங்களுக்கு அனுமதி வழங்கப்படும்.

2. குடியிருப்பு கட்டடங்களுக்கான நிலையான மனை அளவுகள் கொண்ட மாதிரி கட்டட வரைபடங்கள், முகப்பு தோற்றம் மற்றும் குறுக்கு வெட்டு தோற்ற விவரங்களுடன் பொதுமக்கள் எளிதாக கட்டட அனுமதி பெறும் வகையில் உருவாக்கப்படும்.

3 குடிசை தொழில் மற்றும் பசுமை வகை தொழிற்சாலை கட்டடங்களுக்கு உடனடி அனுமதி பெறும் சுய சான்றிதழ் திட்டம் அறிமுகப்படுத்தப்படும்.

4. வரிசை வீடுகள் (Row houses) மற்றும் தொகுப்பு வீடுகளுக்கு (Group houses) பக்கத் திறவிடம் தளர்வு போன்ற சிறப்பு விதிகள் சேர்க்கப்படும்.

5. 20.10.2016க்கு முன் அமைக்கப்பட்ட அனுமதியற்ற மனைப்பிரிவுகளில், மேற்கண்ட தேதிக்கு முன் பதிவு செய்யப்பட்ட தனி மனைகளுக்கு எந்த காலக்கெடுவும் இல்லாமல் மனு பெறப்பட்டு வரன்முறை செய்து கொடுக்கப்படும்.

6. நீர்நிலைக்கு அடுத்துள்ள பள்ளி கட்டங்களுக்கு நீர்நிலைப் பக்கத்தில் எந்த திறப்புகளும் இல்லாத வகையில் சுற்றுச்சுவர் அமைக்கப்படுமெனில் பள்ளி கட்டங்களுக்கு நடைமுறையிலுள்ள விதிகளை பின்பற்றி அனுமதி வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

7. தேசிய நெடுஞ்சாலை மற்றும் மாநில நெடுஞ்சாலையை ஒட்டியுள்ள பள்ளிகளுக்கு, பள்ளி நிர்வாகமே சேவை சாலை உருவாக்குமெனில், அப்பள்ளி கட்டங்களுக்கு நடைமுறையிலுள்ள விதிகளை பின்பற்றி அனுமதி வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

8. உட்கட்டமைப்பு மற்றும் வசதி கட்டணங்கள், வளர்ச்சி கட்டணங்கள் செலுத்துவதற்கான காலக்கெடு 30 நாட்களிலிருந்து 60 நாட்களாக உயர்த்தப்படும்.

9. ஒற்றை குடியிருப்பு கொண்ட தனி வீட்டிற்கு வாகன நிறுத்துமிடத்திற்கென தனி விதிகள் உருவாக்கப்படும்.

10. திட்ட ஒப்புதல்வழங்கும் நடைமுறையில், பொதுமக்களுக்கு உதவி புரிய தற்போது செயல்பாட்டில் உள்ள ஒற்றை சாளர முறையில் மின்னணு உதவி செயலி உருவாக்கப்படும்.

11. நகர் ஊரமைப்புத் துறை, மாநகராட்சி, நகராட்சி மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தில் பதிவுபெற்ற வல்லுநர்கள் நகர் ஊரமைப்பு துறையில் செயல்பட அனுமதிக்கப்படுவர்.

12. நகர் ஊரமைப்பு துறையில் முழுமைத்திட்ட அலகு (தனி பிரிவு) உருவாக்கப்படும்.

13. தமிழ்நாட்டில் முழுமைத்திட்டம் (Master plan) தயாரித்து செயல்படுத்துவதற்கான நிலையான செயல்முறை தயாரிக்கப்படும்.

14. மலையிட பகுதிகளில் (Hill stations), திட்டஅனுமதி செயல்முறை மற்றும் பிற திட்டமிடல் செயல்பாடுகளை வலுப்படுத்த, நகர்ப்புற திட்டமிடுபவர்கள்/பொறியாளர்கள்/கட்டடக் கலைஞர்கள் ஈடுபடுத்தப்படுவார்கள்.

#### தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம்

15. மனை மேம்பாட்டுத் திட்டங்கள்

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் திருவள்ளூர் மாவட்டம் காக்களூரில் 1.05 ஏக்கர் பரப்பளவில் மனை மேம்பாட்டுத் திட்டம் ரூ.0.80 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

16. தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் சேலம் மாவட்டம் எடப்பாடியில் 8.19 ஏக்கர் பரப்பளவில் மனை மேம்பாட்டுத் திட்டம் ரூ. 9.13 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

17. தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் சேலம் மாவட்டம் எடப்பாடியில் 8.19 ஏக்கர் பரப்பளவில் மனை மேம்பாட்டுத் திட்டம் ரூ. 9.13 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

18. தமிழ்நாடு அரசு அலுவலர் வாடகை குடியிருப்பு திட்டம்

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் ஈரோடு மாவட்டம் தாளவாடியில் தமிழ்நாடு அரசு அலுவலர்களுக்காக முதற்கட்ட மாக 100 வாடகை குடியிருப்புகள் ரூ.65 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

வீட்டு வசதி வாரியத்தினுடைய சார்பாக 65 கோடி ரூபாயிலே வாடகை குடியிருப்பு கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. ஈரோடு, தாளவாடி என்பது ஒரு மலைப் பகுதி. அங்கு வாடகைக் குடியிருப்பு கள் இல்லாத காரணத்தால், பெரும்பகுதியினை பார்த்தீர்களென்றால், officeல் காலியிடமாகத்தான் இருக்கும். ஆனால், குடியிருப்பதற்கான வாய்ப்பில்லை. வாடகை வீடு கிடைப்பதில்லை. வீடுகளே இல்லை. எனவே, அதற்காக இந்தத் திட்டத்திலே வாடகைக் குடியிருப்பில் 100 வீடுகளை கட்டுவதற்கு 65 கோடி ரூபாய் ஒதுக்கி கொடுத்திருக்கிறார்கள்.

19. குறைந்த வருவாய் பிரிவினர்களுக்கு தவணைமுறை திட்டம்

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் 2024க்கு முன்பு கட்டப்பட்டு விற்பனை யாகாத குறைந்த வருவாய் பிரிவு குடியிருப்புகள் தவணைமுறை திட்டத்தின் (Hire Purchase Scheme) கீழ் விற்கப்படும்.

19. குறைந்த வருவாய் பிரிவினர்களுக்கு தவணைமுறை திட்டம்

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் 2024க்கு முன்பு கட்டப்பட்டு விற்பனை யாகாத குறைந்த வருவாய் பிரிவு குடியிருப்புகள் தவணைமுறை திட்டத்தின் (Hire Purchase Scheme) கீழ் விற்கப்படும்.

20. வட்டி தள்ளுபடி திட்டம்

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால், 31.03.2015க்கு முன்பு தவணைகாலம் முடிவுற்ற குடியிருப்பு திட்டங்களுக்கு,

மாதத்தவணை தொகையினை தாமதமாக செலுத்தியதற்காக விதிக்கப்படும் அபராதவட்டி முழுமையாக தள்ளுபடி செய்யப்படும்.

வட்டி முதலாக்கத்தின்மீது விதிக்கப்ப டும் வட்டி முழுமையாக தள்ளுபடி செய்யப்படும்.

நிலத்தின் இறுதி விலை வித்தி யாசத்திற்கான வட்டியில், ஒவ்வொரு ஆண்டிற்கு 5 மாதத்திற்குண்டான வட்டி தள்ளுபடி வழங்கப்படும்.

இச்சலுகை 31.03.2026 வரை செயல்படுத்தப்படும். இதன்மூலம் நீண்டகாலமாக நிலுவையில் உள்ள இனங்களில் ஒதுக்கீடுதாரர்கள் விரைவாக விற்பனை பத்திரம் பெற்றுக்கொள்ள இயலும்.

#### கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள்

19. சென்னை, செங்கல்பட்டு, கோயம்புத்தூர், மதுரை, திருநெல்வேலி மற்றும் சேலம் ஆகிய மண்டலங்களிலுள்ள 8 கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள்மூலம் நகைக்கடன் வழங்கப்படும். அங்கு பாதுகாப்பு அறையுடன்கூடிய இரும்பு பெட்டகங்கள் நிறுவப்படும்

20. வேலூர் மற்றும் செங்கல்பட்டு ஆகிய மண்டலங்களிலுள்ள 2 கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள்மூலம் வணிக வளாகங்களுடன்கூடிய சங்க அலுவலக கட்டிடம் கட்டப்படும்

21. வேலூர் மற்றும் செங்கல்பட்டு மண்டலங்களிலுள்ள 3 கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள்மூலம் சிமெண்ட் விற்பனை யகம் துவக்கப்படும்

22. செங்கல்பட்டு மண்டலத்திலுள்ள கூட்டுறவு வீட்டுவசதி சங்கத்தில் எரிபொருள் நிரப்பும் நிலையம் அமைக்கப்படும்

சென்னை ஒருங்கிணைந்த பெருநகர போக்குவரத்து அதிகார அமைப்பு (CUMTA)

சென்னை ஒருங்கிணைந்த பெருநகரப் போக்குவரத்து அதிகார அமைப்பு, நிறைய திட்டங்களைக் கொண்டுவந்து, பல ஆலோசனைகளை சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அவையெல்லாம் நிறைய இருக்கின்றன. எனவே, அவையெல்லாம் நம்முடைய வளர்ச்சிக்கு மிகவும் உறுதுணையாக இருக்குமென்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அதில் ஒன்றை ஒன்று மட்டும் சொல்ல வேண்டுமென்று சொன்னால், பேருந்துகள், இரயில்கள், மெட்ரோ இரயில்கள் ஆகிய மூன்றிலும் ஒரே பயணச்சீட்டினை வைத்து க்கொண்டு, பயணம் செய்வதற்கான ஒரு திட்டத்தைக் கொண்டு வந்துள்ளோம். அநேகமாக இந்தியாவிலே முதல்முறை யாக தமிழ்நாட்டிலே நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

23. சென்னை பெருநகர பகுதியில் ஸ்மார்ட் வாகன நிறுத்த மேலாண்மை செயல்படுத்தப்படும்

சென்னை பெருநகரப் பகுதியில் தடையற்ற போக்குவரத்து இயக்கத்தை எளிதாக்கும் வகையில், வரும் நிதியாண்டில் ஒரு முன்னோடித் திட்டமாக அண்ணாநகரில் சென்னை ஒருங்கிணைந்த பெருநகர போக்குவரத்து அதிகார அமைப்பால் (CUMTA) ஸ்மார்ட் வாகன நிறுத்த மேலாண்மை செயல்படுத்தப்படும்.

24. சென்னை பெருநகரப் பகுதிக்கான விரிவான சாலைவடிவமைப்பு வழிகாட்டுதல்கள் தயாரிக்கப்படும்

25. சென்னை பெருநகரப் பகுதிக்கான போக்குவரத்து பாதிப்பு மதிப்பீட்டு வழிகாட்டுதல்கள் தயாரிக்கப்படும்

நகர வளர்ச்சி குழுமங்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழிகாட்ட, மேம்பாட்டுப் பணிகளைச் சுற்றியுள்ள பகுதிகளில் தடையற்ற போக்குவரத்து இயக்கத்தை உறுதி செய்வதற்காக, போக்குவரத்து பாதிப்பு மதிப்பீட்டு வழிகாட்டுதல்களை, சென்னை ஒருங்கிணைந்த பெருநகர போக்குவரத்து அதிகார அமைப்பு (CUMTA) தயாரிக்கும்.

கடந்த நான்காண்டுகளில் 78 அறிவிப்புகள் கொடுக்கப்பட்டன. இப்போது

27 அறிவிப்புகள் பற்றி நான் கொஞ்சம் சொல்லியிருக்கிறேன். மீதமெல்லாம் அதிலே கொடுக்கப்பட்டிருக்கிறது. கடந்த நான்காண்டுகளில் 78 அறிவிப்புகள் கொடுக்கப்பட்டன. அதில் 7 அறிவிப்புகளைத் தவிர, மற்ற அத்தனையும் செய்திருக்கிறோம். சில வற்றுக்கான பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. 7 அறிவிப்புகள் மட்டும் விடுபட்டிருக்கின்றன என்பதை மட்டும் இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். என்னுடைய துறை சார்ந்த மானியக் கோரிக்கையில் உறுப்பினர்கள்

103 வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கிறீர்கள். அதற்கான பதில் பலபேருக்கும் வந்திருக்கும். மற்றவற்றையும் நாங்கள் கணக்கிலே எடுத்துக் கொண்டி ருக்கிறோம். அவற்றையெல்லாம் செய்வதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம். எனவே, உறுப்பினர்கள் கொடுத்துள்ள 103 வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, மானிய கோரிக்கையை நிறைவேற்றி கொடுக்க வேண்டும் என்ற வேண்டுகோளையும் உங்களிடம் நான் வைக்க விரும்புகிறேன்.

எனவே, இங்கே பேசிய உறுப்பினர்கள் பல கருத்துகளைச் சொல்லியிருக்கிறீர்கள். அவற்றையெல்லாம் நாங்கள் குறி ப்பெடுத்திருக்கிறோம். பயனுடைய கருத்துகள் நிறைய இருக்கின்றன. எனவே, அந்தப் பிரச்சினைகளுக்கும் நிச்சயமாக நாங்கள் தீர்வு காணுவோம் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்பு கிறேன்.

அதேபோல, கொள்கை விளக்கக் குறிப்பு தயாரிப்பதற்கான நடைமுறைகளில் தொடர்ச்சியான ஓர் அனுபவம் வேண்டும். முதலமைச்சர் அவர்கள் அவ்வப்போது எங்களுக்கு கொடுத்துக்கொண்டே இருந்தார்கள். அதனையெல்லாம் எடுத்துதான் இந்த கொள்கை விளக்கக் குறிப்பினை தயார் செய்திருக்கிறோம் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்து, முதலமைச்சர் அவர்களுக்கு நான் நன்றியைத் தெரிவிக்க விரும்புகிறேன். அதேபோல, அரசு தலைமைச் செயலாளர் அவர்கள், முதலமைச்சர் அவர்களுடைய செயலாளர்கள் மற்றும் முதலமைச்சர் அவர்களுடைய தனி செயலாளர், நிதித் துறையினுடைய செயலாளர், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறையினுடைய செயலாளர், வீட்டு வசதி வாரியத்தினுடைய தலைவர், வீட்டு வசதி வாரியத்தினுடைய மேலாண்மை இயக்குநர், நகர் ஊரமைப்பு இயக்குநர், கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்களின் பதிவாளர், சென்னை ஒருங்கிணைந்த போக்குவரத்துக் குழுமத்தினுடைய உறுப்பினர் செயலர், துறையினுடைய அதிகாரிகள், அலுவலர்கள் அனைவருக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியை நான் தெரிவித்துக்கொள்ள விரும்பு கிறேன்.

சட்டமன்ற வளாகத்தில் பணியாற்றுகிற அதிகாரிகள், அலுவலர்கள், என்னுடைய அலுவலகத்தில் பணியாற்றுகிற பணியாளர்கள், அலுவலர்கள் அனைவருக்கும் இந்த நேரத்திலே என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், துறைக்கு உதவிகரமாக பயனுள்ள கருத்துகளை இங்கே பேசிய உறுப்பினர்களுக்கு என்னுடைய சிறப்பு நன்றியை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதேபோல, பத்திரிகை நண்பர்களுக்கு எங்களுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். எனவே, முதலமைச்சர் அவர்களுக்கு மீண்டும் ஒருமுறை என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இங்கே எடுத்துக் கூறப்பட்ட அத்துணை பிரச்சினைகளுக்கும் நிச்சயமாக, நல்ல தீர்வு இந்த மக்களுக்குப் பயன்படுகிற வகையிலே செய்யப்படும் என்ற உத்தரவாதத்தைக் கொடுத்து, இந்த அரிய வாய்ப்பினை எனக்கு கொடுத்தமைக்காக நன்றியை தெரிவித்துக்கொள்கிறனே்.

இவ்வாறு அமைச்சர் சு.முத்துசாமி உரையாற்றினார்.

# தமிழ்நாட்டுக்கு அதிக நிதி ஒதுக்கப்பட்டதா?

## பிரதமர் மோடிக்கு கேள்வி எழுப்பிய ப.சிதம்பரம்!

சென்னை, ஏப். 9 -

"தமிழ்நாட்டுக்கு அதிக நிதி ஒதுக்கப்பட்டது என்று பிரதமர் மோடி கூறியதற்கு ஒன்றிய முன்னாள் நிதியமைச்சர் ப.சிதம்பரம் பதிலடி கொடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் தமது 'எக்ஸ்' தளத்தில் பதிவிட்டிருப்பதாவது:-

'பொருளாதார அளவீடு' என்பது எப்போதும் முந்தைய ஆண்டுகளை விட நடப்பாண்டு அதிகமாகத் தான் இருக்கும் என்பது பொருளாதாரம் படிக்கும் முதலாமாண்டு மாணவர் கூட கூறுவார். ஒன்றிய பட்ஜெட்டின் அளவு ஒவ்வொரு ஆண்டும் முந்தைய ஆண்டை விட அதிகமாக உள்ளது.

அதேபோல அரசின் மொத்த செலவு ஒவ்வொரு ஆண்டும் முந்தைய ஆண்டை விட அதிகமாக உள்ளது. 'எண்களின்' அடிப்படையில், எண்ணிக்கை எப்போதும் ஆண்டுக்கு ஆண்டு அதிகமாகத்தான் இருக்கும். ஆனால் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் விகிதத்தில் அது அதிகமாக உள்ளதா அல்லது மொத்த செலவினத்தின் விகிதத்தில் அது அதிகமாக உள்ளதா என்பதே கேள்வி ?

தமிழ்நாட்டுக்கு கடந்த ஆட்சியை விட அதிக நிதி ஒதுக்கியதாக பிரதமர் மோடி பேசியதற்கு முன்னாள் ஒன்றிய நிதியமைச்சர் ப.சிதம்பரம் இவ்வாறு பதிலடி கொடுத்துள்ளார்.



கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களின் 72 வது பிறந்த நாளை முன்னிட்டு ஈரோடு தெற்கு மாவட்ட இளைஞர் அணி சார்பில் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஜெ.திருவாசகம் தலைமையில் மாவட்டக் கழக செயலாளரும், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை அமைச்சருமான சு.முத்துசாமி மாற்றுத்திறனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கினார். நிகழ்வில் எஸ்.எல். டி.ப.சச்சிதானந்தம், வி.சி.சந்திரகுமார், மா.சு.ராதாகிருஷ்ணன், வீரமணி, ஆ.செந்தில்குமார், செல்லப்பொன்னி, க.சின்னையன், மு. சுப்பிரமணியம், கனிமொழி, சீனிவாசன், உள்ளிட்ட கழக நிர்வாகிகள், இளைஞர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள் பலர் உள்ளனர்.




பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி 06.04.2025 அன்று திருச்சிராப்பள்ளி சத்திரம் பேருந்து நிலையத்தில் இருந்து தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் கும்பகோணம் கோட்டம், திருச்சிராப்பள்ளி மண்டலத்தின் சார்பில் 07 புதிய பேருந்துகளை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக கொடியசைத்து தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில், திருமதி.ஜி.திவ்யா, மதிவாணன், ஆ.முத்துகிருஷ்ணன், போக்குவரத்து துறை அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள், மண்டலத்தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், அரசு அலுவலர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.